# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
# ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருவாரூர்

**அறிவிக்கை எண்: 01/2026** **நாள்: 28.04.2026**

## சட்டத் தன்னார்வலர்கள் சேர்க்கை அறிவிப்பு
## (NOTIFICATION OF PARA LEGAL VOLUNTEERS)

## "காணாமல் போன குழந்தைகள்" தொடர்பான வழக்குகளில் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக காவல் நிலையங்களில் சட்டத் தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு

**************************************************************************************

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bachpan Bachao Andolan VS Union of India and Others, என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படியும், தமிழ்நாடு அரசின் அரசிதழ் அறிவிக்கை G.O.(Ms)No.130, Dated: 12.03.2026ன் படியும், திருவாரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் இயங்கி வரும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம், நீடாமங்கலம், வலங்கைமான் மற்றும் குடவாசல் வட்ட சட்டப்பணிகள் குழுவின் மூலம், "காணாமல்போன குழந்தைகள்" தொடர்புடைய வழக்குகளில் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக காவல் நிலையங்களில் பணியமர்த்தப்படவுள்ள சட்டத் தன்னார்வலர்களை (Para Legal Volunteers) நேர்காணல் மூலம் தேர்வு செய்வதற்காக திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த பின்வரும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவியின் பெயர் | தேர்ந்தெடுக்கப் படும் சட்ட தன்னார் வலர்கள் | மதிப்பூதியம் | கல்வி மற்றும் இதரத் தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | சட்டத் தன்னார்வ தொண்டர்கள் (Para Legal Volunteers- P.L.V) | 40 நபர்கள் | ஒவ்வொரு வருகைக்கும் ரூ.1,000/- வீதம் மதிப்பூதியம் பெற தகுதியானவர்கள். எனினும் ஒரு வழக்கிற்கு அதிகபட்சமாக ரூ.5,000/- என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டே இத்தொகை வழங்கப்படும். | • குறைந்தபட்ச கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு (HSC) ஆகும்.<br>• வயது வரம்பு 25 முதல் 65 வயது வரை இருக்க வேண்டும்.<br>• பட்டதாரிகளுக்கும், சமூகப்பணி, உளவியல் அல்லது அது சார்ந்த பிற துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். |

**சட்டத் தன்னார்வலர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக, பின்வருவன அவர்களின் கடமைகளாகவும், பொறுப்புகளாகவும் அமையும்:**

- விசாரணையின் போது உதவுதல்.
- மனரீதியான ஆதரவு அளித்தல் மற்றும் தகவல்களைப் பெறுதல்.
- காவல் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- மீட்கப்பட்ட குழந்தைக்குப் பிந்தைய கால ஆதரவு அளித்தல்.
- நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை எளிதாக்குதல்.

**திருவாரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சட்டத் தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்**

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் மட்டுமே வழங்கப்படும். மேலும், சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் வழங்கப்படமாட்டாது.
2. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது.
3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை திருவாரூர் மாவட்ட நீதிமன்றம் http://tiruvarur.dcourts.gov.in/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் 15.05.2026 தேதி மாலை 05.45 மணிக்குள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கீழ்க்கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

   தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள்,
   மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
   மாற்று தீர்வு மையம் (ADR Building),
   மாவட்ட நீதிமன்ற வளாகம்,
   திருவாரூர் மாவட்டம் - 610 004.
5. சட்டத் தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு கால சேவைப்பணிக்காக பணி அமர்த்தப்படுவார்கள். அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரின் பரிந்துரையின் பேரில் இக்காலம் மேலும் நீட்டிக்கப்படலாம்.
6. திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.05.2026 மாலை 05.45 மணி, அதற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படும் தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் குறித்த அனைத்து அறிவிப்புகளும் http://tiruvarur.dcourts.gov.in/ என்ற திருவாரூர் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

Sd./xxxxx,
தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருவாரூர் மாவட்டம்.

1) All the Judicial Officers in Tiruvarur District (To Publish in the Notice Board).
2) The System Analyst, District Court to publish in District Court Website.
3) Notice Board of District Legal Services Authority, Tiruvarur.

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவாரூர்.

### சட்டத் தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

விண்ணப்பதாரர்
புகைப்படம்
(சுய சான்றொப்பம்
இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3 | பாலினம் | : | ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர் |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில்நுட்ப தகுதி (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 6 | விண்ணப்பதாரரின் மதம் மற்றும் வகுப்பு | : | |
| 7 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி (ஆதார் சான்றிதழ் நகல் இணைக்கவும்) | : | |
| 8 | தற்போதைய பணி விபரம் | : | |
| 9 | விண்ணப்பதாரர் மீது குற்ற வழக்குகள் ஏதும் உள்ளதா? ஆம் எனில் வழக்கு விபரம் | : | |
| 10 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 11 | விண்ணப்பதாரர்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (குறிப்பிடவும்) | : | திருவாரூர் / மன்னார்குடி / திருத்துறைப்பூண்டி / நன்னிலம் / நீடாமங்கலம் / வலங்கைமான் / குடவாசல் |

நாள்:

இடம்:

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**உறுதிமொழி**

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

குறிப்பு: சட்டத் தன்னார்வலர்களுக்கான பணி நிரந்தர பணி அல்ல. மேலும் தற்காலிகமானது மற்றும் ஊதியம் ஏதும் கிடையாது. சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும். பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் கோரமுடியாது என்பதை நான் அறிந்து கொண்டேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**